டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.04.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 254 - Madurai | Online Edition

## மேற்கு ஆசியாவில் நிலவும்

# சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து அமைச்சகங்களுக்கு இடையேயான அதிகாரிகளின் செய்தியாளர் சந்திப்பு

புது தில்லி, ஏப்.23

மேற்காசியாவில் நிலவும் சூழலுக்கு இடையே மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் இன்று ஊடகவியலாளர்களிடம் விளக்கப் பட்டது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் எரிபொருள் இருப்பு, கடல்சார் நடவடிக்கை, அப்பிராந்தியத்தில் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் உதவி, பல்வேறு துறைகளில் ஸ்திரத்தன்மையை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கினர். இச்சந்திப்பின் போது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையின் புதிய தகவல்களை பகிர்ந்து கொண்டது.

தொழில்துறை செயல்பாடுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும், விநியோக முறைகளை நிலைப்படுத்துவதற்கும் தொழில்துறை மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை ஒழுங்குமுறை மற்றும் எளிதாக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துகிறது.

2026 மார்ச் 25 முதல் சிஎன்ஜி மற்றும் சிபிஜி விநியோக நிலையங்களுக்கான 467-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்பட்டுள்ளன.

41 உயிரி எரிவாயு சிலிண்டர் நிரப்புதல் மற்றும் சேமிப்பு ஆலைகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மாற்று மற்றும் தூய்மையான எரிபொருள் கிடைப்பதை ஊக்குவிக்கிறது.

தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்காக, விநியோக அங்கீகார குறியீடு (டிஏசி) அடிப்படையிலான விநியோகங்கள் சுமார் 94% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

2026 மார்ச் 23 முதல் 20.08 லட்சத்திற்கும் அதிகமான – 5 கிலோ இலவச வர்த்தக சிலிண்டர்கள் விற்கப்பட்டுள்ளன.

சுமார் 5.10 லட்சம் குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 2.56 லட்சம் இணைப்புகளுக்கான உள்கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது, அத்துடன் சுமார் 5.77 லட்சம் வாடிக்கையாளர்கள் புதிய இணைப்புகளுக்காகப் பதிவு செய்துள்ளனர்.

31 இந்தியர்களுடன் இந்திய கச்சா எண்ணெய் கப்பலான 'தேஷ் கரிமா', இன்று மாலை சுமார் 6 மணி அளவில் மும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிப்ரவரி 28 முதல் அப்பிராந்தியத்திலிருந்து இந்தியாவிற்கு சுமார் 11.91 லட்சம் பயணிகள் பயணம் செய்துள்ளனர்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழகத்தில் வெயில் 4 டிகிரி அதிகரிக்கும்

சென்னை, ஏப்.23

பசிபிக் பெருங்கடல் பகுதியில் இருந்து வெப்பக் காற்று மேற்கு நோக்கி பயணிக்கும் காரணத்தால் வங்கக் கடல் பகுதியில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும். அதனால் தமிழகத்தில் படிப்படியாக வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக இயல்பைவிட 4 டிகிரி செல்சியசை விட வெப்பம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வறண்ட வானிலை காரணமாக தமிழகத்தில் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களிலும் நேற்று முன்தினம் மழை பெய்துள்ளது. பிற இடங்களில் வறண்ட வானிலை நிலவியது. வெப்பநிலையை பொருத்தவரையில் இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 4 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக இருந்தது. மற்ற இடங்களில் இயல்பை ஒட்டியே இருந்தது.

வேலூரில் 106 டிகிரி வெயில் கொளுத்தியது. வெப்பநிலையை பொருத்தவரையில் 26ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரியில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவு. இருப்பினும் தற்போதுள்ள நிலையில் இருந்து சற்று உயரவும் வாய்ப்புள்ளது.

அதன் தொடர்ச்சியாக ஒரு சில இடங்களில் இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 3 டிகிரி செல்சியசை விட அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

சென்னையில் வெப்பநிலை அதிகரித்து 101 டிகிரி வெயில் நிலவும் வாய்ப்புள்ளது என வானிலை மையம் தெரிவித்து உள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?



**செய்முறை 10 : பழ சாலட்**

உங்கள் பிள்ளைகளுக்குப் பிடித்த பழங்களை நீங்கள் அடுக்கி வைக்கும் போது, அவர்கள் தங்களின் பழக்கலவை கிண்ணத்தைத் தயாரிக்க விரும்புவார்கள்.

உங்கள் குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த பழங்களைத் தேர்ந்தெடுத்து, தங்களின் பழக்கலவை கிண்ணங்களைத் தயாரித்துக் கொள்வதே மிகச்சிறந்த சாலட்களில் ஒன்றாக அமையும்.

**தேவையான பொருட்கள்**

- பிளம் – 1
- கிவி – 1
- ஆப்பிள் – 1
- பீச் – 1
- ஸ்ட்ராபெர்ரிகள் – 4 முதல் 5 வரை
- திராட்சை – ½ கப்
- புளுபெர்ரி – ½ கப்

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : எல்லாப் பழங்களையும் சிறு துண்டுகளாக நறுக்கவும்.

படி 2 : புத்தம் புதிய பழ சாலட்டை சிறிதளவு தயிருடன் சேர்த்து சுவைத்து மகிழுங்கள், உங்கள் குழந்தைகள் புன்னகைப் பதைக் கண்டு மகிழுங்கள்.

**பாதுகாப்பே முதன்மை :** குழந்தைகள் பாதுகாப்பாகவும் வேடிக்கையாகவும் நெருப்பில்லா சமையல் சாகசங்களை அனுபவிப்பதற்கான குறிப்புகள்

● குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய, நெருப்பில்லா சமையல் செயல்பாடுகளின்போது எப்போதும் பெரியவர்களின் மேற்பார்வை இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

● நெருப்பில்லா சமையலுக்கு, பிளாஸ்டிக் கத்திகள் அல்லது குழந்தைகளுக்குப் பாதுகாப்பான கத்தரிக்கோல்கள் போன்ற, குழந்தைகளுக்கு உகந்த மற்றும் அவர்களின் வயதுக்கு ஏற்ற கருவிகளையும் பாத்திரங்களையும் பயன்படுத்துங்கள்.

● குழந்தைகளுக்குக் காயங்களை ஏற்படுத்தக்கூடிய கூர்மை யான பொருள்கள் அல்லது சூடான பரப்புகளைப் பயன்படுத்து வதைத் தவிர்க்கவும்.

● ஏற்படக்கூடிய அபாயங்களைத் தவிர்க்க, சமையல் குறிப்பு வழிமுறைகளைக் கவனமாகப் பின்பற்றி, குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களையும் அளவுகளையும் பயன்படுத்தவும்.



● உணவைக் கையாளுவதற்கு முன்பு கைகளை நன்கு கழுவவும், மேலும் தேவைக்கேற்ப உணவுப் பொருட்களைக் குளிர்சாதனப் பெட்டியில் வைப்பது போன்ற முறையான உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றவும்.

● கொதிக்கும் நீர் போன்ற சூடான திரவங்களைக் கையாளும் போது கவனமாக இருங்கள். இருப்பினும், நெருப்பில்லா சமையல் செய்முறைகளைச் செய்யும்போது, சூடான திரவங்களின் பயன்பாடு இல்லை.

● தீயில்லா சமையல் முறைகளில் பச்சையான முட்டைகள் அல்லது பச்சையான இறைச்சியைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், ஏனெனில் அவை உணவுவழி நோய்கள் பரவும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடும்.

● வெப்பம் இல்லாமல் சமைக்கும் செயலில் ஈடுபடும் உங்கள் குழந்தைகளுக்கு ஏதேனும் உணவு ஒவ்வாமைகள் அல்லது உணவுக்கட்டுப்பாடுகள் இருந்தால், அவற்றைக் கவனத்தில் கொண்டு, அதற்கேற்ப சமையல் குறிப்புகளைத் தேர்ந்தெடுக்கவும்.

● தூய்மையையும் சுகாதாரத்தையும் பேணுவதற்காக, செயல்பாடு முடிந்த பிறகு சமையல் செய்யும் இடத்தையும் பாத்திரங்களையும் முறையாகச் சுத்தம் செய்யவும்.

உங்கள் குழந்தைகளுக்கு ஒவ்வாமைப் பரிசோதனை செய்துகொள்ளுமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம். உங்கள் குழந்தைக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களைத் தவிர்க்க முயலுங்கள்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...


**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



# காலநிலை மாற்றத்தை தாங்கும் வறண்ட நில விவசாயம் மற்றும் விவசாயிகள் ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம்

விருதுநகர், ஏப்.23

சுற்றுச்சூழல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தற்போதைய பிரச்சனைகளை புரிந்து கொண்டு பொதுவான புரிதலை உருவாக்கி காலநிலை மாற்றத்திற்கேற்ப வறண்ட நில விவசாய முறைகளை செயல்படுத்தும் வகையில் விவசாயிகள்



ஒருங்கிணைந்து செயல்பட ஊக்கப்படுத்தி விவசாயிகளுக்கு கூட்டமைப்பு முக்கியம் என்பதை வலியுறுத்தும் பயற்சி.



N.ஜான்சன் தங்கராஜ், ஆலோசகர், தமுக்கு நிறுவனம் விவசாய விளைபொருட்களை தவிர மற்ற பொருட்களுக்கு எல்லாம் அதன் உற்பத்தியாளர்கள் வைப்பது தான் விலை என்று இருக்கிறது. ஆனால் விவசாயியால் தான் விளைவிக்கும் பொருட்களுக்கு விலை வைக்க முடிவதில்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் தொழில் வாரியான அமைப்பு உள்ளது. அதன் மூலம் அவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும், ஏதாவது பிரச்சனை என்றால் அதற்கு உடனடியாக தீர்வு காணவும் அந்த அமைப்பை உறுதியாக கட்டமைத்துள்ளனர். அவ்வாறு ஒரு உறுதியான கட்டமைப்பு விவசாயிகளுக்கு இல்லை. அதற்கு காரணம் விவசாயிகள் பிரிந்து இருப்பது தான். விவசாயிகள் ஒன்றாக இணைந்து வெற்றிகண்ட அமுல் மற்றும் இஃப்கோ போன்ற கூட்டுறவு நிறுவனங்கள் போன்று நீங்களும் வெற்றி காண முடியும் என்று ஊக்கப்படுத்தினார்.

கரூர் வைஸ்யா வங்கியின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான காலநிலை மாற்றத்திற்கேற்ப தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை தேனி மாவட்டம் இராசிங்காபுரம் விடியல் தொண்டு நிறுவனம் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், கட்டங்குடி மற்றும் செம்பட்டி ஆகிய பஞ்சாயத்துகளில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் பயனடைந்து வரும் விவசாயிகளை ஒருங்கிணைத்து, விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதின் முக்கியத்துவம் குறித்த பயிற்சியை கட்டங்குடியில் உள்ள விடியல் அலுவல கத்தில் வழங்கியது.

தற்போதைய காலநிலை மாற்றம் அதற்கேற்ற விவசாயம் செய்வதில் உள்ள பிரச்சனைகளை பற்றி பொதுவான புரிதலை உருவாக்கி கூட்டமைப்பின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சியின் நோக்கம் குறித்து K.காமராஜ், விடியல் நிறுவனர், விளக்கினார். பயிற்சியில் கலந்துக் கொண்டவர்களை வரவேற்று இதுவரை செயல்படுத்திய திட்டங்கள், அதில் பயன்பெற்ற 1400 விவசாயிகள்

பற்றிய தகவல்களை K.வினோபாலாஜி, திட்ட இயக்குநர், விடியல் பகிர்வு செய்தார். பாரம்பரியமாக விவசாயம் செய்து வருவது முக்கியமில்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு விவசாயத்தையும், விவசாய நடைமுறைகளையும் அணுக வேண்டும் என்பதையும் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒருவரை விவசாயத்தில் ஈடுபடுத்த ஊக்கப்படுத்த வேண்டும் என்பதையும் உணர்ந்துக் கொண்டதாக தங்களின் கருத்துக்களை பகிர்வு செய்தனர்.

கட்டங்குடி மற்றும் செம்பட்டி பஞ்சாயத்து விவசாயிகள் இரண்டு பிரிவாக பிரிந்து, கலந்துரையாடி தங்களின் பஞ்சாயத்துகளை சிறப்பாக செயல்படுத்துவோம் என உறுதியேற்றனர். M.சீதா லட்சுமி, திட்ட மேற்பார்வையாளர் நன்றி கூற கூட்டம் 2 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

# திண்டுக்கல் மார்க்கெட்டில் பூக்கள் விலை சரிவு

திண்டுக்கல், ஏப்.23

திண்டுக்கல் அறிஞர் அண்ணா பூமார்க்கெட்டில் பூக்கள் விற்பனைக்காக திண்டுக்கல் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படுகிறது.

இங்கிருந்து ஈரோடு, திருச்சி, சேலம், சென்னை, கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு பூக்கள் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று முன் தினம் பூக்களின் விலை கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது. தேர்தல், சுபமுகூர்த்த தினங்கள், கோயில் திருவிழாக்கள் இல்லாததால் மார்க்கெட்டில் பூக்களில் தேவை குறைந்ததால் கடுமையாக விலை குறைந்துள்ளது.

சம்பங்கி ஒரு கிலோ ரூ.20க்கும், ரோஸ் ரூ.120க்கும், கோழிகொண்டை ரூ.40க்கும், செவ்வந்தி ரூ.100க்கும், மல்லி பூ ரூ.300க்கும், முல்லை பூ ரூ.120க்கும், ஜாதி பூ ரூ.300க்கும், கனகாம்பரம் ரூ.250க்கும், காக்கரட்டான் ரூ.300க்கும், அரளி ரூ.30க்கும், வாடாமல்லி ரூ.30க்கும் செண்டு மல்லி ரூ.40க்கும், விருட்சி பூ ரூ.60க்கும், பட்டன் ரோஸ் ரூ.150க்கும், தாமரை பூ ஒன்று ரூ.10க்கும் விற்பனையானது. பூக்களின் விலை சரிவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

# நவரை மற்றும் குறுவைப் பருவத்திற்கு ஏற்ற தரமான விதை நெல் விற்பனை

திருச்சி, ஏப்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் வேளாண்மை கல்வி நிறுவனம் குமுளூர், திருச்சியில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் தரமான நெல் விதை இரகங்கள் உற்பத்தி செய்து திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் மற்றும் நெல் பயிரிடும் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வருகிறது.



இந்த வருடத்திற்கான விதை நெல் விற்பனையை கடந்த 20.04.2026 அன்று இக்கல்லூரி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் மு.அசோகன், விவசாயிகளுக்கு கொடுத்து விற்பனையை தொடக்கி வைத்தார்.

தற்போது, நவரை மற்றும் குறுவை பருவத்திற்கு ஏற்ற நெற் பயிர் இரகமான ஏ எஸ் டி 16 (ASD 16) ஆதார விதை (FS 1) 2000 கிலோ, (விலை ரூ. 41 கி / 30 கி பை) வேளாண்மை கல்வி நிறுவனத்தில் இருப்பு உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதை நெல் விதையினை நேரில் சென்றோ அல்லது பார்சல் மூலமாகவே பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு முதல்வர், வேளாண்மை கல்வி நிறுவனம், குமுளூர் 621712, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொலைபேசி எண் : 98426 52934 (முனைவர் ஜெ. கோகுலகிருஷ்ண்ணன்) 70104 39150 (முனைவர் இரா. வினோத்).

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY


LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அழிந்து வரும் அலுங்கு (எறும்புத்திண்ணி) - ஒரு பார்வை



காட்டின் காவாளிகள் அல்லது இயற்கையின் பூச்சிக்கொல்லி என்று இதனை குறிப்பிடுகின்றனர். (PANGOLIN ANTEATER) என்ற அறிவியல் பெயர் கொண்டது இவை பாலூட்டி இனமாகும்.

பார்ப்பதற்கு பூனை அளவில் இருக்கும். இந்த அரிய விலங்கு ஆபத்தை உணர்ந்தால் எதிரிகளிடம் தப்பிக்க தன்னை ஒரு இரும்பு குண்டு போல சுருண்டு கொள்ளும் இயல்பு உடையது.

உலகில் 8 வகையான அலுங்குகள் உள்ளன. ஆசியாவில் 4 இனங்கள் உள்ளன. அவைகளில் இந்தியாவில் காணப் படுவது ‘இந்திய அலுங்கு என்ற (INDIAN PANGOLIN) யாகும். இவை இந்தியா, இலங்கை, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளில் சமவெளி மற்றும் மலைகள் போன்ற இடங்களில் காணப்படுகின்றன.

**எங்கெங்கும் வாழும்?**

இவை வறண்ட புதர்க் காடுகள், வெப்ப மண்டல காடுகளில் வாழ்கின்றன.

**எறும்பு தின்னியின் அமைப்பு**

எறும்புத் தின்னியின் தலையை தவிர அனைத்து உறுப்பு களும் கடினமான செதில்கள் (SCALES) போன்ற தோலால் மூடப்பட்டுள்ளன.

இவை நீண்ட வால் மற்றும் உறுதியான செதில்கள் உடலை போர்த்திய வண்ணம் காணப்படும். ஆண் எறும்பு தின்னியை விட பெண் எறும்பு தின்னிகள் அளவில் சிறியவை.

இவை 15-20 ஆண்டுகள் வரை வாழும். இவற்றின் நீண்ட நாக்கு மூலமாக எறும்புகளையும் பூச்சிகளையும் தூரத்துல இருந்து பிடித்து உண்ணும்.

இதற்கு பார்வை திறன் குறைவு. ஆனால் மோப்ப சக்தி அதிகம். இவை நீரில் நீந்தும் ஆற்றல் கொண்டவை. ஒரு சில வகைகள் மரமேறியாகவும் உள்ளது. இவை தனிமை விரும்பிகளாக உள்ளதால் எளிதாக மக்கள் பிடித்து மருத்துவ குணமுள்ளதாக கருதி அதிகமாக வேட்டையாட படுவதால் இந்த இனங்கள் இன்று அழியும் தறுவாயில் உள்ளது. உலகிலேயே அதிக அளவில் கடத்தப்படும் உயிரனமாக உள்ளது. தற்போது அழிவின் விளிம்பில் உள்ளதாக இயற்கை ஆர்வலர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

இவை மட்டும் இல்லையென்றால் கரையான்களின் எண்ணிக்கை கட்டுபாடின்றி பெருகி காடுகளில் அழிவை ஏற்படுத்தும். அவற்றை கட்டுப்படுத்த கூடிய ஓரே உயிரனமாக உள்ளது இந்த எறும்பு தின்னி என்ற அலுங்குகள்.

அவற்றை பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# எம்.ஐ.டி வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் வயல் விழா (அஸ்வகந்தா)

திருச்சி, ஏப்.23




திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், வெள்ளாளப்பட்டியில் அமைந்துள்ள எம்.ஐ.டி வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் அஸ்வகந்தா (Ashwagandha) மருத்துவ பயிர் சாகுபடி தொழில்நுட்ப முறை பற்றிய வயல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் இயற்கை முறையில் மாணவர்களால் பயிர் செய்யப்பட்ட அஸ்வகந்தா மூலிகை பயிரினை முனைவர் பொ.மணிவேல், முதன்மை விஞ்ஞானி ICAR-NIRCA வேடசந்தூர், துவக்கி வைத்து அஸ்வகந்தா மருத்துவ பயிரினை அங்கக வேளாண்மை தொழில்நுட்ப முறையில் சாகுபடி செய்தல் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பம், மதிப்புக் கூட்டுதல் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் த. ரகுசந்தர், மருத்துவ பயிர் சாகுபடி முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

தொகுப்பாசிரியர் த.ரவிச்சந்திரன், தோட்டக்கலைத்துறை இவ்விழாவினை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு அஸ்வகந்தா சாகுபடி களப்பயிற்சி அளித்து விவரித்தார்.

இவ்விழாவில் மாணவர்கள் தங்களின் அய்யங்களை கேள்விகள் மூலம் கேட்டு அறிந்தனர்.




மேலும் இவ்விழாவில் விழுப்புரம் மாவட்டம்,

தீவனூர் பகுதியைச் சேர்ந்த முன்னோடி இளம் விவசாயி ஸ்ரீதர், அஸ்வகந்தா சாகுபடி பற்றிய தன் கள அனுபவங்களை மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டார்.

இவ்விழாவில் இரண்டாமாண்டு வேளாண்மை மாணவர்கள் மற்றும் முதலாமாண்டு தோட்டக்கலை பட்டயப்படிப்பு மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இவ்விழா ஏற்பாட்டினை கல்லூரி தோட்டக்கலை துறை பேராசிரியர்கள் முனைவர் ஜே.கேபரியல், முனைவர் மா.கலைமணி மற்றும் திரிபுரசுந்தரி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# மயிலாடுதுறை மாவட்டத்திற்கு ஏற்ற குருவை நெல் சாகுபடிக்கு ரகங்களும் விதை உற்பத்தியும்

நெல் மிகவும் முக்கியமான உணவுப்பயிராகும். உலகளவில் நெல் சாகுபடி சுமார் 158 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றது.

அவற்றில் ஏறத்தாழ 90 சதவிகிதம் ஆசிய கண்டத்தில் குறிப்பாக இந்தியா மற்றும் சீனா நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் சுமார் 44 மில்லியன் எக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகின்றது. மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் அரிசியின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தற்போது இந்தியாவில் நெல்லின் உற்பத்தி 111 மில்லியன் டன் ஆகும். எதிர் வரும் காலங்களில் 2025 ஆம் ஆண்டில் நெல்லின் தேவை 140 மில்லியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் உணவுப் பயிர்களில் நெல் ஒரு முக்கிய பயிராகும். இம்மாநிலத்தில் சுமார் 18 லட்சம் எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இது மாநிலத்தில் மொத்த சாகுபடி பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகும். மொத்த நெல் சாகுபடி பரப்பளவில் 15.7 சதவீதம் குறுவைப் பருவத்திலும், 74.7 சதவிகிதம் சம்பா பருவத்திலும், 9.6 சதவிகிதம், நவரைப் பருவத்திலும் பயிரிடப்படுகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 1,07,435 எக்டரில் நெர் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 38,441 எக்டர் குறுவைப் பருவத்திலும் 68,988 எக்டர் சம்பா / தாளடி பருவத்திலும் 100 எக்டர் கோடை பருவத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது.

குறுவைப் பருவத்தில் தட்ப வெப்ப சூழல், பெரும் மழை அளவு, பூச்சிநோய் தாக்குதல் போன்ற காரணிகளின் தாக்கம் மற்ற பருவங்களைக் காட்டிலும் குறைவாக உள்ளதால் பயிர் நன்கு வளர்ந்து அதிக விளைச்சல் பெற ஏதுவாகிறது. இப்பருவத்தில் உயர் விளைச்சல் அளிக்கும் இரகங்களை தேர்வு செய்து பயிரிடுவதால் மேலும் அதிக விளைச்சல் பெறலாம்.

அதிக விளைச்சல் தரக்கூடிய சன்ன இரகங்களுக்கான விவசாயி களின் எதிர்பார்ப்பு ஆடுதுறை – 43, ஆடுதுறை – 45, கோ – 51,

ஆடுதுறை - 53 ஆகிய இரகங்கள், சாகுபடியில் தொடங்கி, தற்பொழுது மிகச் சன்ன இரகங்களின் (Superfine variety) எதிர்பார்ப்பாக மாறி முக்கியத்துவம் பெற்று வருகின்றது. மிக சன்ன இரகங்களைப் பொறுத்தமட்டில் BPT 5204. கோ-51, NLR-3449. ஜேஜிஎல் 1798, அக்சயா, அம்மன், ஆர்.என்.ஆர்.15048, கோ-55 ஆகிய மிக சன்ன இரகங்கள் விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்து வருகின்றன. இந்த மிகச் சன்ன இரகங்களின் அரிசியானது மிகச் சன்னமாகவும், விவசாயிகளால் சந்தைப் படுத்துதலுக்கு ஏதுவாகவும், நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாகவும் அமைந்துள்ளதால் விவசாயிகளின் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் மிகச் சன்ன ரகங்கள் (Superfine) பயிரிடப்படும் பரப்பளவானது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, டெல்டா மாவட்ட விவசாயிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதிக்கு ஏற்ற குறுவை பருவத்தில் சாகுபடி செய்யப்படும் மிக சன்ன இரகங்களையும், அவற்றின் குணாதிசயங்களையும் சாகுபடி முறைகளையும் தெரிந்து கொண்டு அந்த இரகங்களை பயிரிடலாம். குறுவை பருவத்திற்கு கோ-55, ஆடுதுறை-43, அக்சயா, அம்மன் மகேந்திரா-எம்.பி.ஆர்.606 ஆகிய இரகங்கள் பயிரிட ஏற்றவை.

குறுவைப் பருவத்தில் மே, ஜூன் மாதத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. இந்தப் பட்டத்தில் உழவர்கள் குறுகியகால (105-115 நாள்கள்) வயதுடைய நெல் இரகங்களைப் பயிரிடுவர். இந்தப் பட்டத்திற்கு உகந்த இரகங்கள் ஆடுதுறை 36, ஆடுதுறை 37, ஆடுதுறை 43, ஆடுதுறை 45, ஆடுதுறை 53, ஆடுதுறை 55, ஆடுதுறை 57. டிகேஎம்.9, டிகேஎம்.15, அம்மை 16, திருச்சி 2, திருச்சி 5, கோ-51, கோ 54, கோ 55, ருப்பதி சாரம் 5, மதுரை 6, கோஆர்எச் 3 என்ற விரீய ஒட்டு நெல் ஆகும்.

**குறுகிய கால இரகங்கள்**

**டிகேஎம் - 15 (TKM - 15)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2022
● பெற்றோர் : டிகேஎம் 12/ஐஇடி 21620
● வயது : 115-120 நாட்கள்
● பருவம் : தமிழ்நாட்டில் நேரடி நெல் விதைப்பிற்கு வடகிழக்குப் பருவமழை காலமான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைப்பதற்கு ஏற்றது
● சராசரி விளைச்சல் 4200 கிலோ / எக்டர் (மத்திய வறட்சியில் விளைச்சல் கொடுக்க

● வறட்சி மற்றும் சூழ்நிலைகளைத் தாங்கி பண்புகளைக் கொண்டுள்ளது பற்றாக்குறைச் வளரும்

● சமையலுக்கு உகந்த மத்திய சன்ன அரிசியையுடைய இந்த இரகம் 63 சதவிகிதம் அரவைத் திறனும், 63 சதவிகிதம் முழு அரிசி காணும் திறனும் கொண்டது

**டீஆர்ஓய் – 5 (TRY - 5)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2022

● பெற்றோர் : டீஆர்ஓய் 2 ஐ மரபு உருமாற்றம் செய்து உருவாக்கப்பட்டது.

● வயது : 155–120 நாட்கள்

● பருவம் : தமிழ்நாட்டில் குறுவை, பின் தாளடி மற்றும் நவரைப் பருங்களில் பயிரிட ஏற்றது.

● சராசரி விளைச்சல் : 5100 கிலோ/எக்டர்

● உவர்நிலங்களில் பயிரிட ஏற்றது

● சமையலுக்கு ஏற்ற மத்திய சன்ன அரிசியை உடைய இரகம் 68 சதவிகிதம் அரவைத் திறனும். 57 சதவிகிதம் முழு அரிசி காணும் திறனும் கொண்டது.

**கோ – 55 (CO – 55)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2022

● பெற்றோர் ஏடிடீ43/ஜீஇபி24

● வயது : 110–115 நாட்கள்

● பருவம் : சொர்ணவாரி கார். குறுவை மற்றும் நவரைப் பட்டங்களில் பயிரிட ஏற்றது

● சராசரி விளைச்சல் 6057 கிலோ / எக்டர் (ஏடிடீ 53 ஐ விட 7.00 மற்றும் மற்றும் ஆர் என் ஆர் 15048 ஐ விட 1531 சதவிகிதம் அதிக வினளச்சல் தரவல்லது)

● மிகச் சின்ன அரிசியை உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (66 சதவிகிதம்) முழு அரிசி காணும் திறனும் (62 சதவிகிதம்) கொண்டது.

**ஏடிடீ – 57 (ADT – 57)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2022

● பெற்றோர் : எடிடீ45/ஏசிகே 03002


● வயது : 115 நாட்கள்

● பருவம் : சொர்ணவாரி கார், குறுவை, நவரை மற்றும் கோடை போன்றப் பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது

● சராசரி விளைச்சல் : 6500 கிலோ / எக்டர்

● சமையலுக்கு ஏற்றமத்திய சன்ன இரகமாகும்

தொடர்ச்சி – பக்கம் 21ல்


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

● இந்த இரகம் 69 சதவிகிதம் அரவைத் திறனும், 60 சதவிகிதம் முழு அரிசி காணும் திறனும் கொண்டுள்ளது

ஆடுதுறை - 55 (ADT - 55)

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2021
● பெற்றோர் : ஆடுதுறை 43/ஐ.ஆர்.60
● வயது : 115-120 நாட்கள்
● பருவம் : சொர்ணவாரி, கார், குறுவை, நவரை
● நடுத்தர உயரம், நடுத்தரத் தூர்கட்டும் திறன் மற்றும் சாயாதத் தன்மை
● சராசரி விளைச்சல் : 5929 கிலோ/எக்டர்
● பாக்டீரிய இலைக் கருகல் நோய்க்கு முற்றிலும் எதிர்ப்புத்திறன்
● இலை சுருட்டுப் புழு, குலைநோய், குருத்து அழுகல் ஆகிய வற்றிற்கு நடுத்தரம் தாங்கும் திறன்
● மத்திய சன்ன வெள்ளை அரிசி, 1000 நெல் மணிகளின் எடை 183 கிராம்
● அரவைத்திறன் 681 சதவிகிதம் மற்றும் முழு அரிசி காணும் திறன் 57.0 சதவிகிதம்

**கோ - 54 (CO - 54)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2021
● பெற்றோர். சி.யி04110/சி.பி05501
● வயது : 115-118 நாட்கள்
● பருவம் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை
● சராசரி விளைச்சல் : 6354 கிலோ/எக்டர்
● புகையான், குலைநோய், இலை உறைக் கருகல், இலைப்புள்ளி நோய் ஆகியவற்றிற்கு நடுத்தரத்தாங்கும் திறன்
● மத்திய சன்ன வெள்ளை அரிசி, 1000 நெல் மணிகளின் எடை 15.0 கிராம்
● அரவைத்திறன் 680 சதவிகிதம் மற்றும் முழு அரிசிகாணும் திறன் 60.7சதவிகிதம்
● அமைலோஸ் இடைப்பட்ட என்ற மாவுப் பொருள் அளவில் இருப்பதால் சமைப்பதற்கும், இட்லி தயாரிப்பதற்கும் மிகச் சிறந்தது.

**ஆடுதுறை - 53 (ADT - 53)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2018
● பெற்றோர் : ஏ.டி.டீ.43/ ஜெஜி.எல் 384
● வயது : 115 நாட்கள்
● நடுத்தர உயரம். நிமிர்ந்த செடி அமைப்பு மற்றும் உயர் விளைச்சல்
● சராசரி நெல் விளைச்சல் : 6334 கிலோ/எக்டர்

● அதிகபட்ச விளைச்சல் 9875 கிலோ / எக்டர். (அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்) +

● 1000 நெல் மணிகளின் எடை 14.5 கிராம்

● நடுத்தர சன்ன அரிசி : 63.5 சதவிகிதம் அதிக அரவைத் திறனும், 50 சதவிகிதம் முழு அசி காணும் திறனும் கொண்டது.

● உயர் துத்தநாகம் (26.06 பிபிஎம்) மற்றும் இரும்புச்சத்து (14.70பிபிஎம்) கொண்டது

● ஆடுதுறை 43க்கு இணையான சிறந்த சமையல் பண்புகளைக் கொண்டது

**ஆடுதுறை – 56 (ADT – 56)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2022

● பெற்றோர் : வாரங்கல் 14377 x எம்டியு 5

● வயது : 118நாட்கள்

● சராசரி வினைச்சல் : எக்டருக்கு 6400 கிலோ

● நடுத்தர உயரம் குத்தான செடி உறுதியான

**செடி அமைப்பு**

● 1000 நெல்மணிகளின் எடை 16.6 கிராம்

● மத்தியசன்ன அரிசியானது 69.4 சதவிகிதம் அதிக அரவைத்திறனும், 58.8 சதவிகிதம் முழு அரிசிகாணும் திறனும் கொண்டது

● புகையான். குருத்துப்பூச்சி போன்ற பூச்சிகளுக்கும், குலை நோய், இலையுறை அழுகல் மற்றும் நெல் நிறமாற்ற நோய் களுக்கு மிதமான எதிர்ப்புத்திறனும் கொண்டது

● தமிழ்நாட்டில் கார். குறுவை சொர்ணவாரி, நவரை மற்றும் கோடைப் பருவங்களில் பயிரிட ஏற்றது

● இந்த இரகம் தேசிய அளவில் சத்தீஸ்கர். மஹாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், பிகார். மேற்கு வங்கம் மற்றும் ஜார்கண்ட் போன்ற மாநிலங்களிலும் பயிரிட ஏற்றது.

**கோ – 51 (CO – 51)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2013

● பெற்றோர் : ஏடிடீ43/ஆர் ஆர் 272-1745

● குறுகியகால இரகம் (105-110 நாட்கள்)

● சராசரி விளைச்சல் எக்டருக்கு 6623 கிலோ

● அதிகபட்ச விளைச்சல் (நல்லாம்பள்ளி, தர்மபுரி மாவட்டம்) எக்டருக்கு 11377 கிலோ

● குலைநோய். புகையான் மற்றும் பச்சை இலைத் தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது

● மத்திய சன்ன அரிசி. அதிக அரவைத்திறனும், முழு அரிசி காணும் திறனும் கொண்டது

● சிறந்த கொண்டது சமையல் பண்புகளைக்

● தமிழ்நாட்டில் குறுவை, சொர்ணவாரி கார். நவரை ஆகிய பருவங்களுக்கும். ஏனைய குறுகிய கால இரகங்கள் சாகுபடி பகுதிகளுக்கும் ஏற்றது செய்ய பகுதிகளுக்கு ஏற்றது.

**டிபிஎஸ் – 5 (வீஊறீ – 5)**

● வெளியிடப்பட்ட ஆண்டு : 2015

● பெற்றோர் : ஏ.எஸ்.டி 16 ஏடிடீ37

● சராசரி விளைச்சல் எக்டருக்கு 6301 கிலோ

**குறுகியகால இரகம் (115–18 நாட்கள்)**

● அதிகபட்ச விளைச்சல் (மோகனூர் நாமக்கல் மாவட்டம்) எக்டருக்கு 11:567 கிலோ

● தண்டு துளைப்பான். இலை கருட்டுப் புழு தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் உடையது

● குறுகிய தடிமனான அரிசியை உடைய இந்த இரகம் நல்ல அரவைத்திறன் கொண்டது

● ஏ எஸ் டீ 16 மற்றும் ஆடுதுறை 37 ஆகிய குண்டு இரகங் களுக்கு சிறந்தமாற்று இரகம்

● தமிழ் நாட்டில் கார் மற்றும் பிந்திய பிசான பருவத்தில் பயிரிட ஏற்றது.

**கோ – 53 (CO – 53)**

● வெளியிடப்பட்ட ஆண்டு 2020

● பெற்றோர் : பி. எம். கே. 3 / நெறுங்கன். வறட்சியைத் தாங்கும் திறன் கொண்டது

● குறுகியகால இரகம் (115–120 நாட்கள்)

● மானாவாரியில் எக்டருக்கு 3718 கிலோ விளைச்சல் தரவல்லது

● வெண்முதுகு தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது

● இலையுறை அழுகல், இலைப்புள்ளி நோய். நெல் துங்ரோ மற்றும் குலை நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது

● வெள்ளை நிற குட்டை பருமன் அரிசியுடைய இந்த இரகம் அதிக அரவைத்திறனும் (69.6 சதவிகிதம்). முழு அரிசி காணும் திறனும் (59.6சதவிகிதம்) கொண்டது

● தமிழ்நாட்டில் வறட்சி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் பயிரிட ஏற்றது.

நாளை தொடரும்...


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396